இந்த நாள்

- விசுவாவசு வருடம் மாசி மாதம் 16-ம் நாள். சனிக்கிழமை. வளர்பிறை.
- துவாதசி திதி: இரவு 8.43 வரை; அதன் பிறகு திரயோதசி.
- நட்சத்திரம்: புனர்பூசம் காலை 9.35 வரை; அதன் பிறகு பூசம்.
- யோகம்: சித்தயோகம்.
- நல்ல நேரம்: காலை 7.30 - 8.30; மாலை 4.30 - 5.00 மணி வரை.
- ராகு காலம்: காலை 9.00 - 10.30 மணி வரை.
- எமகண்டம்: மதியம் 1.30 - 3.00 மணி வரை.
- சந்திராஷ்டமம்: மூலம்.
- சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்.

தினகரன்
திருச்சி

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
37 C / 98.6 F	20 C / 68 F	37 C / 98.6 F	19 C / 66.2 F

வறண்ட வானிலை காணப்படும்

வீட்டின் பூட்டை உடைத்து 35 பவுன் கொள்ளை பக்கம் 14

நம்பெருமாள் ஒற்றை பிரபை வாகனத்தில் வீதியுலா பக்கம் 15

சத்தா வர்ணம் என்னும் மஞ்சள் நீராட்டுடன்

பொன்னர் சங்கர் மாசி பெருந்திருவிழா நிறைவு

ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

சத்தா வர்ணம் வீதியுலா வந்த பெரியகாண்டியம்மன் உற்சவ மூர்த்தி.

மணப்பாறை, பிப்.28: திருச்சி மாவட்டம் மணப்பாறையில் கடந்த 10 நாட்களாக நடைபெற்று வந்த பொன்னர் சங்கர் மாசி பெருந்திருவிழா நேற்று முன் தினம் மாலை சத்தா வர்ணம் என்னும் மஞ்சள் நீராட்டு விழாவுடன் நிறைவுபெற்றது.

வீர வரலாற்று சிறப்புமிக்க மாசிப்பெருந்திருவிழா, மணப்பாறை அருகே உள்ள அண்ணன்மார்கள் வீரப்போரிட்டு மாண்ட இடமான வீரப்பூர்பெரியகாண்டியம்மன் கோயிலிலும், கோட்டை கட்டி வாழ்ந்த பொன்னிவளநாட்டிலும் கடந்த பிப்ரவரி 17-ஆம் தேதி முதல்திருவிழாதொடங்கி நடைபெற்று வந்தது.

இதில், படுகளம் சாய்தல், பின் பெரியகாண்டியம்மன் அளித்த புனிதநீரால் எழுப்புதல் நிகழ்வு, குதிரை வாகனத்தில் பொன்னர், வெள்ளை யானைவாகனத்தில்பெரியகாண்டியம்மனும் வந்த வேடபரி நிகழ்வு, பெரிய தேரோட்டம்என முக்கிய விழாக்கள் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து திருவிழாவின் 10-ஆம்நாள் நிறைவு விழாவாக நேற்று முன் தினம் மாலை சத்தா வர்ணம் என்னும் மஞ்சள் நீராட்டு விழா ஆலய வளாகத்தில் நடைபெற்றது. சாம்புவான் உயிர் காளையில்அமர்ந்துமுரசு கொட்டி முன்னே செல்ல அதைத் தொடர்ந்து மங்கல வாத்தியங்களுடன் பெரியகாண்டியம்மன் உற்சவ மூர்த்தி வீதிஉலா வர, வீரப்பூர் ஜமீன்தார்கள் பரம்பரை அறங்காவலர்கள் பொன்னழகேசன், சௌந்தரபாண்டியன், அசோக்குமார், தரனீஸ் ஆகியோர் பொதுமக்கள் மீதுமஞ்சள்நீராடிகொண்டாடினர்.

அரசு பொதுத் தேர்வின்போது

குறிப்பிட்ட நேரத்தில் அறைக்கு செல்ல வேண்டும்

நியமன அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்

திருச்சி பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளியில் பொதுத்தேர்வு நியமன அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா, இணை இயக்குனர் ராஜேந்திரனுக்கு புத்தகம் வழங்கினார்.

திருச்சி, பிப்.28: அரசு பொதுத்தேர்வின்போது குறிப்பிட்ட நேரத்தில் அறைக்கு செல்லவேண்டும் என்று நியமன அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

திருச்சி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பு,

திருச்சி மாவட்டத்தில் ப்ளஸ் 2, ப்ளஸ்1 (கடந்த ஆண்டு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள்), பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு நடைபெற உள்ளது. மார்ச் 2ம் தேதி முதல் 26ம் தேதி வரை பிளஸ் 2 பொது தேர்வு, மார்ச் 3ம் தேதி முதல் 27ம் தேதி வரை பிளஸ் 1 பொது தேர்வு, மார்ச் 11ம் தேதி முதல் ஏப்ரல் 6ம் தேதி வரை பத்தாம் வகுப்பு பொது தேர்வு நடைபெற உள்ளது. பிளஸ் 2 தேர்வு திருச்சி மாவட்டத்தில் 14 ஆயிரத்து 731 மாணவர்களும் 16 ஆயிரத்து 484 மாணவிகளும் என மொத்தமாக 31 ஆயிரத்து 215 பேர் எழுதுகின்றனர்.

இதேபோல் 510 மாணவர்களும் 457 பெண்களும் என மொத்தம் 967 பேர் தனித்தேர்வர்கள், மாற்றுத் திறனாளி மாணவர்கள் 392 பேர் பள்ஸ் 2 தேர்வு எழுத உள்ளனர். மொத்தமாக 258 பள்ளிகளை சார்ந்த மாணவர்களுக்கு 134 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது, அதாவது லால்குடி கல்வி மாவட்டத்தில் 62 மையங்களும், திருச்சி கல்வி மாவட்டத்தில் 72 மையங்களிலும் தேர்வு எழுத உள்ளனர். 34 வழித்தட அலுவலர்கள் வாயிலாக 134 தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்கள் கொண்டு செல்லப்பட உள்ளது. 135 முதன்மை கண்காணிப்பாளர்கள் 134 துறை அலுவலர்கள் மற்றும் 21 கூடுதல் துறை அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பிளஸ் 1 பொதுத் தேர்வு (கடந்த ஆண்டு அரியர்) மாணவர்கள் 433 மாணவர்களும் 200 மாணவிகளும் என மொத்தமாக 633 மாணவர்கள் தேர்வு எழுத உள்ளனர். அதே போல 107 மாணவர்களும் 84 மாணவிகளும் மொத்தம் 197 பேர் தனித் தேர்வாளர்களாக தேர்வு எழுத உள்ளனர். 260 பறக்கும் படையினர் தேர்வு சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்ய நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருச்சி மற்றும் லால்குடி கல்வி மாவட்டத்தில் அறை கண் காணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கும் கூட்டம் திருச்சி தெப்பக்குளம் பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளியில், அரசு தேர்வுகள் இயக்கக இணை இயக்குனர் ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் கணக்கு பதிவு இயல் பாடத்திற்கு அடிப்படை தரவுகள் கொண்ட கால்குலேட்டர் பயன்பாடு, வேதியியல் இயற்பியல் பாடத்திற்கு மடக்கை அட்டவணை (லாகோரிதம்) பயன்பாடு ஆகியவை மாணவர்களுக்கு வழங்கப்படும். தேர்வுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் குறிப்பிட்ட நேரத்தில் அறைக்கு செல்ல வேண்டும், அனைத்தையும் இணை இயக்குனரிடம் தெரிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு திருச்சி மாவட்டம் முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா தலைமை வகித்தார். மாவட்ட கல்வி அலுவலர்கள், திருச்சி மாவட்ட ஆசிரியர்கள், கல்வி மற்றும் பயிற்சி நிறுவன பேராசிரியர்கள், சிறப்பு திறன் மாணவர்கள் சொல்வதை எழுதும் ஆசிரியர்கள் (ஸ்க்ரைப்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நேற்றைய விலை (திருச்சி)

தங்கம்

1 கிராம் – ₹14,800.00
1 பவுன் – ₹1,18,400.00

வெள்ளி

1 கிராம் – ₹290.00
10 கிராம் – ₹2,900.00

ஓடும் பஸ்சில் முதியவரிடம்

பணம் பறித்தவர் கைது

திருச்சி,பிப்.28: ஓடும் பஸ்சில் முதியவரிடம் பணம் பறித்தவரை போலீசார் கைது செய்தனர்.

திருச்சி பாலக்கரை காஜாபேட்டை பசுமடம் பகுதியைசேர்ந்தவர் ஜெயராஜ் (60). இவர் பிப்.26ம் தேதி சத்திரம் பஸ் நிலையத்தில் இருந்து ரயில்வே ஜங்ஷன் பகுதிக்கு பஸ்ஸில் பயணம் செய்தார். அப்போது முதியவரின் பாக்கெட்டில்வைத்திருந்த ரூ.400ஐ மர்ம நபர் பறித்தார். உடனேபொதுமக்கள் அவரைபிடித்துபோலீசில் ஒப்படைத்தனர். விசாரணையில் பட்டர் வொர்த் ரோடு பகுதியைச் சேர்ந்த சக்திவேல்(30)என்பதுதெரியவந்தது. இதையடுத்து கோட்டை போலீசார் அவர் மீது வழக்கு பதிந்து கைது செய்தனர். பின்னர் ஜாமினில் விடுவித்தனர்.

மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

CIN: U67100MH2007PLC174759

ரீடெயில் மைய & பதிவு அலுவலகம்: எடெல்வீஸ் ஹவுஸ், சிஎஸ்டி சாலை சற்றுத் தொலைவில், கலீனா, மும்பை 400098

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்") இன் விதி 8(6) & 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) சட்டம், 2002 கீழ் அசையா கடனீட்டுச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

எச்டிபி பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (இதன் பின்னர் எச்டிபிஎப்எஸ்எல்/ அசெய்னர் என்று குறிப்பிடப்படும்) நிறுவனத்தின் கடன் வசதிகளானது இஏஆர்சி–ட்ரஸ்ட்–எஸ்சி–410 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படும் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு உரிமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேற்கூறிய உரிமை ஒதுக்கீட்டினைப் பின்பற்றி, எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி ஆனது உரிமையீந்தோர் கடமைப் பொறுப்பை ஏற்றுள்ளது. மேலும் கடனீட்டு கடனீந்தோராக அதன் உரிமைகளை செயல்படுத்துகிறது. எனவே இஏஆர்சி, கடனீட்டு கடனீந்தோராக அதன் திறனில், சர்ஃபாசி சட்டத்தின் 13(4) மற்றும் அதன் கீழான விதிகள் கீழ் கீழே குறிப்பிட்ட அசையா கடனீட்டுச் சொத்துகளை சுவாதீனம் செய்திருந்தது. இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் 30 நாட்கள் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோர் பெயரில் அடமானம் அளிக்கப்பட்ட, கடனீட்டு கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் (AO) கையக சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையா கடனீட்டுச் சொத்துகள், இங்கே கீழே குறிப்பிட்ட இஏஆர்சிக்கு உரிய நிலுவைத் தொகைகளை அதற்கான மேற்கொண்டு வட்டி மற்றும் பிற செலவினங்கள்/செலவுகளுடன் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரரி(கள்)டமிருந்து இஏஆர்சியால் பெறப்பட்ட தொகையைக் கழித்து மீட்பதற்காக, "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளன. சொத்துக்கான நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏலத்துக்கு வைக்கப்படும் கடனீட்டுச் சொத்துகளின் விவரம்

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்/ உப கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	பொறுப்பாட்சி பெயர்	மொத்த நிலுவைத்தொகை இந்திய ரூபாய் 25.02.2026 தேதியன்று	நிர்ணய விலை இந்திய ரூபாயில்	முன்வைப்புத் தொகை (EMD) இந்திய ரூபாயில்	ஏலத் தேதி & நேரம்	சுவாதீனம் வகை
1.	898577 / HDBFSL	1) M/s. சுப்ரீம் டிஜிட்டல் கம்ப்யூட்டர்ஸ் (கடன்தாரர்) 2) திரு. P. சந்திரசேகர் (உப-கடன்தாரர்) 3) திரு. S.P. இராஜசேகரன் (உப-கடன்தாரர்) 4) திருமதி P S ரேவதி (உப-கடன்தாரர்) 5) திரு. பன்னீர்செல்வம் (உப-கடன்தாரர்)	இஏஆர்சி பொறுப் பாட்சி எஸ்சி -410	Rs. 3,84,26,299.07	Rs. 1,16,00,000	Rs. 11,60,000	30.03.2026 & 11.30 AM	கையக

கடனீட்டுச் சொத்தின் விவரம்: கரூர் பதிவு மாவட்டம், மேல கரூர் சார் பதிவு மாவட்டம் கரூர் வட்டட்ம, தாந்தோணி கிராமம், S.F. எண்: 366 பகுதியில் உள்ள நிலங்கள் வீட்டுவசதி வாரியம் காலனி வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் மனை எண்: HIG 256 இன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கில்: மனை எண்: M.46, கிழக்கில்: மனை எண்: M.255, தெற்கில்: 30 அடி அகலம் கிழக்கு மேற்கு சாலை, மேற்கில்: மனை எண்: M 257 மேற்கூறிய சொத்தின் அளவீடு: கிழக்கு–மேற்காக இரு பக்கங்களில் 40 அடி வடக்கு–தெற்காக இரு பக்கங்களில் 60 அடி. 2400 சதுர அடி வீட்டு மனை அங்குள்ள RCC கட்டிடத்துடன், அதன் கதவுகள், பொருத்துதல்கள், சாதனங்கள், ஏனையவற்றுடன் மேலும் பாதை உரிமைகளுடன்.

ஏலம் செயல்பாடு குறித்த முக்கிய தகவல்:

1	அனைத்து கேட்பு வரைவோலைகளும் (DD) எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் – இஎம்டி அக்கவுண்ட் என்ற பெயரில் மேலும் மும்பையில் மாற்றத்தக்க வகையில் பெறப்பட வேண்டும்.	
2	RTGS மூலமாக செலுத்தப்படும் முன்வைப்புத் தொகை: கணக்கு எண்ணின் பெயர்: எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் – இஎம்டி அக்கவுண்ட், கணக்கு எண். 000405158602, வங்கியின் பெயர்: ஐசிஐசிஐ பேங்க், IFSC குறியீடு: IFSC ICIC0000004	
3	முன்வைப்புத்தொகை சமர்ப்பிக்க கடைசி நாள்	ஏலத் தேதிக்கு 1 நாள் முன்பு பெறப்படும்
4	ஏலப்புள்ளிகள் சமர்ப்பிப்பதற்கான இடம்	முதல் தளம், எடெல்வீஸ் ஹவுஸ், சிஎஸ்டி சாலை தொலைவில், கலினா, மும்பை–400098
5	ஏலம் நடைபெறுமிடம் (ஏலத்துக்கான இணையதளம்)	மின்–ஏலம் (https://auction.edelweissarc.in)
6	தொடர்பு நபர் தொலைபேசி எண்களுடன்	கட்டணமில்லா எண்–1800 266 6540,
7	சொத்து பார்வையிடும் நாள் & நேரம்	முன் அனுமதியின்படி

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பு அதாவது https://auction.edelweissarc.in காணவும்.

நாள்: 28.02.2026
இடம்: திருச்சி

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்காக

Edelweiss
Asset Reconstruction

திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில்

தானியங்கி ஓட்டுனர் சோதனை தளம்

விரைவில் பயன்பாட்டுக்கு வரும்



திருச்சி பிப்.28: திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தானியங்கும் ஓட்டுனர் சோதனை தளம் விரைவில் பயனபாட்டுக்கு வரும் என போக்குவரத்து வட்டாரத்தினர் தெரிவித்தனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை மற்றும் மாருதி சுசூகி நிறுவனம் சார்பில் தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் போக்குவரத்து அலுவலகங்களில் தானியங்கி ஓட்டுனர் சோதனை தளம் அமைக்க ஒப்பந்தம் செய்தது. இந்த தளத்தின் நோக்கமாக வாகன ஓட்டிகள் சாலையில் விழிப்புணர்வுடன் வாகனத்தை இயக்குவதும், விபத்தில் சிக்காமல் வாகனத்தை இயக்க வேண்டும் என்பதாக உள்ளது.

திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட இந்த தானியங்கி ஓட்டுனர் சோதனை தளம் அமைக்கும் பணி தற்போது நிறைவடைந்துள்ளது. இதன் வாயிலாக டூவீலர்கள் மற்றும் கார்களை இயக்கும் வாகன ஓட்டிகளுக்கு ஓட்டுனர் உரிமம் வழங்கப்படும். தளத்தினுள் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்து வழிகாட்டல்படி வாகன ஓட்டுனர்கள் வாகனத்தை இயக்க வேண்டும். சாலை வதிகளை பின்பற்றி வாகனத்தை இயக்க வெற்றிகரமாக ஓட்டுனர் உரிமம் அளிக்கப்படும்.

இந்த தளத்தின் வாயிலாக ஓட்டுனர் உரிமம் வழங்குவது வெளிப்படையாக நடைபெறும், மனித தவறுகளால் தகுதியான ஓட்டுனர்கள் உரிமம் ரத்து செய்யப்பட வாய்ப்பு இல்லை. இந்த தானியங்கி ஓட்டுனர் சோதனை தளத்தில் நுழைவு பகுதி முதல் சோதனை ஓட்டத்தை முடிக்கும் வரை ஓட்டுனர்கள் துல்லியமான கண்காணிப்பு மேராக்கல் வாயிலாக கண்காணிக்கப்படுவர்.

சாலையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் அனைத்தும் துல்லியமாக ஓட்டுனர்களால் கடைப்பிடிக்கபட்டால் மட்டுமே இதில் ஓட்டுனர்கள் சோதனையை நிறைவு செய்ய முடியும், அதற்காக கண்காணிப்பு கருவிகள் (ரேடியோ ப்ரீக்வென்சி ஐடன்டிபிகேஷன் கருவி) பொருத்தப்பட்டுள்ளது இதன் வாயிலாக வாகன ஓட்டிகள் தளத்திற்குள் நுழைந்ததும் தவறு செய்தால் அதை துல்லியமாக கண்காணிக்கப்படும். டூவீலரை பொருத்தவரை தளத்திற்குள் நுழையும்போதே தலைக்கவசம் அணிந்து ஓட்டுனர் சோதனையை தொடங்க வேண்டும், அதேபோல் காரை பொருத்தவரை ஓட்டுனர் சீட் பெல்ட் அணிந்து சோதனையை தொடங்க வேண்டும். 26ம் மேற்பட்ட கேமராக்கல் இத்தளத்திற்குள் பொருத்தப்பட்டு ஓட்டுனர்கள் சோதனையின்போது துல்லியமாக கண்காணிக்கப்படுவர், அதேவேளையில் சாலைவிதிகளை சரியாக பின்பற்றுகின்றனரா என்றும் கண் காணிக்கப்படுவர் இதுகுறித்து போக்குவரத்து வட்டாரங்களில் விசாரித்தபோது,

இந்த தானியங்கும் ஓட்டுனர் சோதனை தளம் முழுவதுமாக அமைக்கப்பட்டுவிட்டது, போக்குவரத்து துறை சார்பில் ஒப்புதல் அளித்த பிறகு வெகுவிரைவில் பயன்பாட்டுக்கு வரும் முழுவதுமாக தொழில்நுட்பம் சார்ந்து உள்ளதால் அதை சரியாக கையாள சற்று காலஅவகாசம் தேவைப்படுகிறது. அதேபோல் போக்குவரத்து அலுவலர்களின் பணிப்பழுவும் குறையும். இதன் வாயிலாக டூவீலர் மற்றும் சார் சோதனை நடைபெறும். அதேபோல் அதிகனரக வாகனங்களுக்கு வழக்கம்போல அலுவலர்கள் சோதனை அடிப்படையில் ஓட்டுனர் உரிமம் வழங்கப்படும் என்றனர்.

சுவாதீன அறிவிப்பு

எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

CIN: U67100MH2007PLC174759

ரீடெய்ல் சென்ட்ரல் மற்றும் பதிவு அலுவலகம்: எடெல்வீஸ் ஹவுஸ், CST சாலை சற்று தொலைவில், கலினா, மும்பை 400098.

அட்டவணை IV [விதி 8 (1) சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)]

இவ்வாறிருக்க, கடனீட்டு கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் (சட்டம்), 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் (விதி 3) உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே குறிப்பிட்டவாறு ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கடன்தாரர்கள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

அதன் பிறகு, கடனீட்டு கடனீந்தோர் சர்ஃபாசி சட்டம், 2002 இன் பிரிவு 5 கீழ் பல்வேறு பொறுப்பாட்சிகளின் பொறுப்பாளராக அதன் சொந்த/அதன் திறனில் செயல்படும் **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு(** இனிமேல் இஏஆர்சி ஆக குறிப்பிடப்படும்) நிதிச் சொத்துகளை உரிமை ஒதுக்கீடு செய்துள்ளனர். இஏஆர்சி ஆனது கடனீட்டு கடனீந்தோர்களின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் கடன்தாரரால் பெறப்பட்ட நிதி உதவி தொடர்பாக கீழ்க்காணும் கடனீட்டு உரிமைகள், உத்திரவாதங்கள், அடமானங்கள் ஆகியவற்றுடன் நிதிச் சொத்துகள் தொடர்பான கடனீட்டு கடனீந்தோரின் அனைத்து உரிமங்கள், உரிமைப்பத்திரம் மற்றும் உரிமைகள் இஏஆர்சி–க்கு வந்தடைந்துள்ளன மேலும் இஏஆர்சி ஆனது கடனீட்டு கடனீந்தோராக அதன் அனைத்து உரிமைகளை செயல்படுத்துகிறது.

கடன்தாரர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார், இதன்மூலம் கடன்தாரர்(கள்), உப கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரரு(கள்)க்கு மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர், **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்டரக்சன் கம்பெனி லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரியாக கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 உடன் சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (4) கீழ் அவருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை ஒவ்வொரு சொத்துக்கு எதிரே குறிப்பிட்ட நாளில் சுவாதீனம் செய்துள்ளார்.

வ. எண்	கடன் கணக்கு எண்& கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	பொறுப்பாட்சி விவரங்கள்	சுவாதீன தேதி	அடையாளப்பூர்வ / கையக சுவாதீனம்
4.	கடன் கணக்கு எண் : LPUDSTL0000030591 திரு.நாகராஜன் VC (கடன்தாரர்), திருமதி.நவமணி N (உப–கடன்தாரர்), திரு.செந்தில்குமார் N (உப–கடன்தாரர்)	17-08-2024 & Rs. 33,16,503.93/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 418 மற்றும் எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்	24.02.2026	அடையாளப்பூர்வ சுவாதீனம்

கடனீட்டுச் சொத்தின் விவரம்: புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், ஆலங்குடி சார் பதிவு அலுவலகம், ஆலங்குடி தாலுகா, ஆலங்குடி கிராமம், கேவிஎஸ் தெரு, 1, பழைய சர்வே எண்.55/5, பரப்பளவு 10 சென்ட்கள், பழைய சர்வே எண். 55/3, பரப்பளவு 15 சென்ட்கள், மொத்த பரப்பளவு 25 சென்ட்களில் வீட்டுமனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் மனை எண்.15, 2183 ச.அடி பரப்பளவு கொண்டது. பழைய சர்வே எண்.55/5 இல் உள்ள 10 சென்ட்கள் பரப்பளவில் 542 ச.அடி, பழைய சர்வே எண். 55/5, 10 சென்ட்கள் பரப்பளவில் 1641 ச.அடி இரண்டும் சேர்ந்த 2183 ச.அடி பரப்பளவு உள்ள அதாவது 5 சென்ட்களுக்குச் சமமான தற்போதைய துணை பிரிவின்படி புதிய சர்வே எண். 55/3B2 இல் உள்ள 0.02.0 ஏர்ஸ் பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி அடங்கிய நிலம் உள்ள சொத்து. **எல்லைகள்: கிழக்கில்:** மனை எண்.16, **மேற்கில்:** மனை எண்.14, **வடக்கில்:** சந்தானம் மற்றும் ரங்கசாமியின் பட்டா நிலத்தில் உள்ள பொது பாதைவழி, **தெற்கில்:** ஆள்வாரப்பன் நஞ்சை. 2183 ச.அடி பரப்பளவு உள்ள நிலத்தில் ஆர்சிசி மேற்கூரையிட்ட வீடு மற்றும் அனைத்து பயன்பாட்டு உரிமைகளும் அடங்கிய சொத்து.

வ. எண்	கடன் கணக்கு எண்& கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	பொறுப்பாட்சி விவரங்கள்	சுவாதீன தேதி	அடையாளப்பூர்வ / கையக சுவாதீனம்
5.	கடன் கணக்கு எண் : 1583278 M/s. குமார் அக்ரோ சென்டர் (கடன்தாரர்), திரு. R காமராஜன் (உப–கடன்தாரர்), திருமதி. K ரேவதி (உப–கடன்தாரர்)	22.05.2025 & Rs. 65,71,525/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 482 மற்றும் எச்டிபி பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்	24.02.2026	அடையாளப்பூர்வ சுவாதீனம்

கடனீட்டுச் சொத்தின் விவரம்: இனம் எண்.1: அனைத்து துண்டுகள் மற்றும் பகுதிகள் அடங்கிய காலி நிலம் புதுக்கோட்டை மாவட்டம், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், கீரமங்கலம் துணை பதிவு மாவட்டம், கீரமங்கலம் வடக்கு கிராமம், திருவரங்குளம் ஊராட்சி, ஆலங்குடி வட்டம், பழைய சர்வே எண்.241/17, புதிய சர்வே எண்கள்: 241/55, 241/56, 241/58 மற்றும் 241/59 இல் அமைந்துள்ள சொத்து. சொத்தின் அளவீடு: 241/55 நத்தம் ஹெக்டேர் 0.00.70 ஏர்ஸ்–763 ச.அடி, 241/56 நத்தம் ஹெக்டேர் 0.00.10 ஏர்ஸ்–218 ச.அடி, 241/58 நத்தம் ஹெக்டேர் 0.00.10 ஏர்ஸ்–218 ச.அடி மற்றும் 241/59 நத்தம் ஹெக்டேர் 0.00.18 ஏர்ஸ்–218 ச.அடி. ஹெக்டேர் 0.01.17 ஏர்ஸ், 1308 ச.அடி பரப்பளவு உள்ள நிலத்தில் 784 ச.அடி பரப்பளவு கட்டடம் உள்ள சொத்து. கதவு எண்.13, மின்சார இணைப்பு எண்.225 உள்ள அந்த சொத்து வழக்கமான பாதைவழி உரிமைகள் மற்றும் பயன்பாட்டு உரிமைகளைக் கொண்டது. அதன் நான்கு **எல்லைகள்: வடக்கில்:** ஆனந்தனுக்குச் சொந்தமான கட்டடம், **தெற்கில்:** அரசு நூலகத்தின் கட்டடம், **கிழக்கில்:** பட்டேல் சாலை, **மேற்கில்:** செட்டி ஊருணி குளம். **இனம் எண்.2.** அனைத்து துண்டுகள் மற்றும் பகுதிகள் அடங்கிய காலி நிலம் புதுக்கோட்டை மாவட்டம், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், கீரமங்கலம் துணை பதிவு மாவட்டம், கீரமங்கலம் வடக்கு கிராமம், திருவரங்குளம் ஊராட்சி, ஆலங்குடி வட்டம், பழைய சர்வே எண்.241/11, புதிய சர்வே எண்: 241/18, ஹெக்டேர் 0.01.52 ஏர்ஸ்– ஏக்கர் 0.04 சென்ட்கள்–1744 ச.அடி. சொத்தின் அளவீடு: ஹெக்டேர் 0.01.52 ஏர்ஸ், ஏக்கர் 0.04 சென்ட்கள், 1744 ச.அடி பரப்பளவு உள்ள நிலம் உள்ள அந்த சொத்து வழக்கமான பாதைவழி உரிமைகள் மற்றும் பயன்பாட்டு உரிமைகளைக் கொண்டது. அதன் நான்கு **எல்லைகள்: வடக்கில்:** ராமச்சந்திரன் சேத்தருக்குச் சொந்தமான கட்டடம், **தெற்கில்:** சூர்யமூர்த்திக்குச் சொந்தமான கட்டடம், **கிழக்கில்:** பஞ்சாயத்து கட்டடம், **மேற்கில்:** சாலை.

வ. எண்	கடன் கணக்கு எண்& கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	பொறுப்பாட்சி விவரங்கள்	சுவாதீன தேதி	அடையாளப்பூர்வ / கையக சுவாதீனம்
6.	கடன் கணக்கு எண் : 2618135 M/s. மணிகண்டன் டிரேடர்ஸ் (கடன்தாரர்), திரு. S.தனபால் (உப–கடன்தாரர்), திருமதி. D சுதா (உப–கடன்தாரர்)	23.08.2024 & Rs. 35,27,498.60/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 483 மற்றும் எச்டிபி பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்	24.02.2026	அடையாளப்பூர்வ சுவாதீனம்

கடனீட்டுச் சொத்தின் விவரம்: ஆலங்குடி டவுன் மற்றும் வட்டம், ஆலங்குடி சார் பதிவு மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், ஆலங்குடி டவுன் எல்லை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. சொத்தின் அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்.56 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்.57 அடி 6 அங்குலம், வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்.28 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்.33 அடி, நிலம் 1732 ச.அடி பரப்பளவு கொண்டது. அனைத்து பயன்பாட்டு உரிமைகள், பாதை உரிமைகள் உள்ள இந்த சொத்தின் நான்கு **எல்லைகள்: கிழக்கில்:** வடக்கு தெற்கு பஞ்சாயத்து சாலை, **வடக்கில்:** ரவிச்சந்திரனுக்குச் சொந்தமான மனையின் மீதம், **மேற்கில்:** வளர்மதிக்குச் சொந்தமான மனை, **தெற்கில்:** 15 அடி கிழக்கு மேற்கு சாலை. ஆலங்குடி டவுன் மற்றும் வட்டம், ஆலங்குடி சார் பதிவு மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், ஆலங்குடி டவுன் எல்லை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. சொத்தின் அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்.56 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்.57 அடி 6 அங்குலம், வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்.28 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்.33 அடி, நிலம் 1732 ச.அடி பரப்பளவு கொண்டது. அனைத்து பயன்பாட்டு உரிமைகள், பாதை உரிமைகள் உள்ள இந்த சொத்தின் நான்கு **எல்லைகள்: கிழக்கில்:** வடக்கு தெற்கு பஞ்சாயத்து சாலை, **வடக்கில்:** ரவிச்சந்திரனுக்குச் சொந்தமான மனையின் மீதம், **மேற்கில்:** வளர்மதிக்குச் சொந்தமான மனை, **தெற்கில்:** 15 அடி கிழக்கு மேற்கு சாலை. ஆலங்குடி டவுன் மற்றும் வட்டம், ஆலங்குடி சார் பதிவு மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், ஆலங்குடி டவுன் எல்லை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. சொத்தின் அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்.56 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்.57 அடி 6 அங்குலம், வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்.28 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்.33 அடி, நிலம் 1732 ச.அடி பரப்பளவு கொண்டது. அனைத்து பயன்பாட்டு உரிமைகள், பாதை உரிமைகள் உள்ள இந்த சொத்தின் நான்கு **எல்லைகள்: கிழக்கில்:** வடக்கு தெற்கு பஞ்சாயத்து சாலை, **வடக்கில்:** ரவிச்சந்திரனுக்குச் சொந்தமான மனையின் மீதம், **மேற்கில்:** வளர்மதிக்குச் சொந்தமான மனை, தெற்கில்: 15 அடி கிழக்கு மேற்கு சாலை.

கடனீட்டுச் சொத்துகளை **மீட்பதற்**கு, கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டடத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப் படுகின்றன. கடன்தாரருக்கு குறிப்பிட்டு மேலும் பொதுவாக பொதுமக்களுக்கு இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம். மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் கீழே குறிப்பிட்டத் தொகை மற்றும் அதற்கான வட்டிக்காக **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்டரக்சன் கம்பெனி லிமிடெடின்** வசூலுக்கு உட்படும்.

இடம்: தமிழ்நாடு
நாள்: 28.02.2026

ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர்
எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

Edelweiss
Asset Reconstruction

pnb Housing
Finance Limited
Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-A அசையாச் சொத்து(கள்) மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை அலுவலகம்: பிளாட் எண்.-3. 2வது தளம். ராமநாதன் ஆர்கேட். 16. கே.சி. சாலை, தென்னூர். திருச்சி-620017. தமிழ்நாடு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி **"உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்"** விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
NHL/RTNG/0524/1264299 சரத்குமார் முருகேசன்/ போதும்பொன்னு முருகேசன் கி.அ.: ரோஷ்னி தில்லை நகர்	Rs. 15,05,188.38 as on date 15-04-2025	அடையாளப் பூர்வ	நத்தம் SF எண் 389/11B, புலியூர் கிராமம் &, பஞ்சாயத்து, சர்வே எண், குன்றாண்டார்கோவில் பஞ்சாயத்து யூனியன், குளத்தூர் தாலுக்கா, P, குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகம், குளத்தூர், புதுக்கோட்டை, தமிழ்நாடு, 622504	Rs. 14,28,000	Rs. 1,42,800	30.03.2026	Rs. 10,000	06-03-2026 from 11:00 A.M. to 05:00 P.M.	31-03-2026, from 01:00 P.M. to 02:00 P.M.	*ஏதுமில்லை/ அறியப்படாதது

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து.

** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரபூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பின்என்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் நிரல் எண்– K இல் குறிப்பிடப்பட்ட ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை. **2.** எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனானஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம் மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். **3.** கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து/கடனீட்டுச் சொத்து சர்ஃபாசி சட்டத்தின் விதிமுறைகளின்படி மறுவிற்பனை செய்யப்படும். **4.** M/s. ஃபோர்குளோசர்இந்தியா.காம் மின்–ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் 605 ஏ, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட், ஹைதராபாத்–500038, இணையதளம்: info@bankauctions.in இடத்தில் அதன் தலைமை அலுவலகம் கொண்டிருக்கும் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ நபரை ஏங்கெல்ஸ்/ ஜோதிகண்ணன்/ ஸ்ரீ சரண் செல்பேசி: 9344007827/ 9840487424 / 9738931789, மின்னஞ்சல்: auction@pnbhousing.com. அல்லது இணையதளம்: www.pnbhousing.com. காணவும்.

இடம்: ரோஷ்னி தில்லை நகர், நாள்: 27-02-2026

ஒம்/-அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பைக் திருட்டு

திருச்சி, பிப்.28: திருச்சியில் பைக் மாயமானது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

லால்குடி அக்ரஹாரத்தை சேர்ந்தவர் சரவணன்(26). திருச்சி அண்ணா சிலை அருகே உள்ள தனியார் கம்பெனியில் காசாளராக பணிபுரிந்து வருகிறார். இவர் கடந்த 24ம் தேதி அலுவலகம் முன் பைக்கை நிறுத்தியுள்ளார். பின்னர் வந்து பார்த்த போது பைக் திருட்டு போனது தெரிய வந்தது. இதுகுறித்த புகாரின் பேரில் கோட்டை போலீசார் வழக்குப்பதிந்து மர்ம நபரை தேடி வருகின்றனர்.